ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2023 ஒத்தோபர் 02

# வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம் - 2023 ஓகத்து

## முக்கிய பண்புகள்

- வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 ஓகத்தில் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட உயர்ந்தளவிலான வீழ்ச்சியினால் உந்தப்பட்டு விரிவடைந்தது. இருப்பினும், 2023 யூலையுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் இறக்குமதிச் செலவினம் ஆகிய இரண்டும் அதிகரித்தன.
- தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் ஆகிய இரண்டும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஓகத்தில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகளைப் பதிவுசெய்தன.
- 2023 ஓகத்தில், அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடு தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தவேளையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு முதலீடுகள் 2023 ஓகத்தில் தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.
- மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023 ஓகத்து இறுதியளவில் ஐ.அ.டொலர் 3.6 பில்லியன் தொகையாக விளங்கின.
- இலங்கை ரூபாவானது 2023 ஓகத்தில் ஐ.அ.டொலரிற்கெதிராகப் பரந்தளவிலான உறுதித்தன்மையினைத் தொடர்ந்தும் கொண்டிருந்தது.

## வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம்

### ஏற்றுமதிகள்







| வர்த்தக மீதி (ஐ.அ.டொ.பில்) | ஓகத் | சன-ஓகத் |
|---|---|---|
| 2022 | 0.26 | 3.9 |
| 2023 | 0.31 | 3.0 |

### இறக்குமதிகள்




### சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள்




### தொழிலாளர் பணவனுப்பல்கள்




### மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்*




* சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது

### கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தேறிய உட்பாய்ச்சல்கள் (முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் - தேறிய)




### அரச பிணையங்கள் சந்தையிற்கான மொத்த உட்பாய்ச்சல்கள்




### வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள் (ஐ.அ.டொ/ரூ)



## வணிகப்பொருள் வர்த்தக மீதி

வணிகப்பொருள் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது 2022 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 260 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 ஓகத்தில் ஐ.அ.டொலர் 307 மில்லியனிற்கு விரிவடைந்தது. இருப்பினும், இறக்குமதிகளில் ஏற்பட்ட பாரியளவிலான வீழ்ச்சியானது ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினை எதிரீடு செய்ததன் காரணமாக 2023 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் வர்த்தகக் கணக்கின் ஒன்றுசேர்ந்த பற்றாக்குறையானது 2022இன் அதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3,889 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 2,964 மில்லியனிற்குச் சுருக்கமடைந்தது. வர்த்தக மீதியில் இம்மாற்றத்திற்குப் பங்களித்த முக்கிய காரணிகள் வரைபடம் 1இல் காட்டப்பட்டுள்ளன.

**வரைபடம் 1: 2023 சனவரி-ஓகத்து வரையிலான காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையின் ஆண்டிற்காண்டு மாற்றத்திற்கு பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்[1]

**ஒட்டுமொத்த ஏற்றுமதிகள்: ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2023இன் இதுவரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்தளவிலான வருவாய்களை 2023 ஓகத்தில் குறித்துக்காட்டின.** இருப்பினும், வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2023 ஓகத்தில் ஐ.அ.டொலர் 1,119 மில்லியனிற்கு 8.7 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தன. ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியானது வெளிநாட்டுக் கேள்வியில் காணப்பட்ட தொடர்ச்சியான மெதுவடைதலின் காரணமாக, குறிப்பாக ஆடைகளின், குறைந்தளவிலான கைத்தொழில் ஏற்றுமதிகள் முக்கியமாக உந்தப்பட்டது. 2023 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த ஏற்றுமதி வருவாய்களும் கடந்த ஆண்டின் அதே காலப்பகுதியில் 10.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, ஐ.அ.டொலர் 8,010 மில்லியனாக விளங்கின.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்:** கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 ஓகத்திலும் வீழ்ச்சியொன்றினைத் தொடர்ந்து பதிவுசெய்ததுடன் இக்குறைவின் குறிப்பிடத்தக்கதொரு பங்கு போக்குவரத்துச் சாதனங்களின் ஏற்றுமதியில் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்பினை எதிரீடு செய்த ஆடைகளுக்குப் பங்களித்திருக்கக்கூடும். ஆடை ஏற்றுமதியானது 2023 ஓகத்தில் முடிவடைகின்ற எட்டு மாத காலப்பகுதியில் 20.0 சதவீத வீழ்ச்சியினைப் பதிவுசெய்து, அநேகமான முக்கிய சந்தைகளிலிருந்தான (ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சியம்) வருவாய்களில் வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. மேலும், ஏனையவற்றிற்கிடையில், இறப்பர் உற்பத்திகள் (முக்கியமாக, டயர்கள் மற்றும் இறப்பர் கையுறைகள்) மற்றும் விலங்குத்தீன் (முக்கியமாக, கோதுமை மீதி) என்பவற்றின் ஏற்றுமதிகளில் கணிசமானளவிலான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இருப்பினும், போக்குவரத்துச் சாதனம்

[1] இலங்கை மத்திய வங்கியின் ஏற்றுமதிகளின் வகைப்படுத்தல் மற்றும் நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த ஏற்றுமதிகளின் வகைப்படுத்தல் என்பன முறையே இணைப்பு II மற்றும் இணைப்பு III இல் காட்டப்பட்டுள்ளன.

(விசேடமாக, கப்பல்), உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் (நீர்க்கலம் மற்றும் வானூர்தி எரிபொருள் ஏற்றுமதிகளின் அதிகரித்த அளவுகளினால் உந்தப்பட்டு) என்பவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2023 ஓகத்தில் அதிகரித்தன.

**வேளாண்மை ஏற்றுமதிகள்:** கடலுணவு (முக்கியமாக, புதிய மீன்), தேயிலை மற்றும் தெங்குடன் தொடர்புடைய உற்பத்திகள் (முக்கியமாக, தென்னந்தும்பு மற்றும் தேங்காய்த் துருவல்) என்பவற்றிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட குறைவின் முக்கிய காரணமாக வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 ஓகத்தில் வீழ்ச்சியடைந்தன. தாழ்ந்தளவிலான ஏற்றுமதி விலைகளினால் உந்தப்பட்டு தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்த வேளையில், ஏற்றுமதி அளவுகள் 2022 ஓகத்துடன் ஒப்பிடுகையில் சிறியளவிலான அதிகரிப்பொன்றினைக் கொண்டிருந்தன. இருப்பினும், 2023 ஓகத்தில் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினால் உந்தப்பட்டு, முக்கியமாக மிளகு, வாசனைத்திரவிய ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் அதிகரிப்பொன்று காணப்பட்டது.

**கனிப்பொருள் ஏற்றுமதிகள்:** மண் மற்றும் கற்கள் (முக்கியமாக, பளிங்கு) என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட குறைப்பினால் முதன்மையாக பங்களிக்கப்பட்டு, கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஓகத்தில் வீழ்ச்சியடைந்தன.

**வரைபடம் 3: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 4: ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்[2]

**ஒட்டுமொத்த இறக்குமதிகள்: வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 2023 ஓகத்தில் ஐ.அ.டொலர் 1,426 மில்லியனிற்கு 4.0 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தது.** இருப்பினும், இறக்குமதி மட்டுப்பாடுகளின் தளர்த்தல்களினால் பகுதியளவில் ஆதரவளிக்கப்பட்டு, 2023 யூன் தொடக்கம் மாதாந்த அடிப்படையொன்றில் இறக்குமதிச் செலவினத்தில் சிறியளவிலான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டுள்ளது. இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது இடைநிலைப் பொருட்கள் மீதான குறைந்தளவிலான செலவினத்தினால் முதன்மையாக உந்தப்பட்ட போதிலும் நுகர்வுப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினங்கள் அதிகரிப்பொன்றினைக் காட்டின. அதேவேளை, 2023 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த இறக்குமதிச் செலவினமானது கடந்த ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 10,974 மில்லியனிற்கு 14.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**நுகர்வுப் பொருட்கள்:** உணவு மற்றும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் ஆகிய இரண்டினதும் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்களினால் உந்தப்பட்டு, நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஓராண்டிற்கு

[2] இலங்கை மத்திய வங்கியின் இறக்குமதிகளின் வகைப்படுத்தல் மற்றும் நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த இறக்குமதிகளின் வகைப்படுத்தல் என்பன முறையே இணைப்பு IV மற்றும் இணைப்பு V இல் காட்டப்பட்டுள்ளன.

முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 ஓகத்தில் அதிகரித்தது. தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் (முக்கியமாக, தொலைபேசிகள்), மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்கள் மற்றும் வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடப் பொருட்கள் என்பன காரணமாக உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினம் அதிகரித்தது. மேலும், உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது பாற்பண்ணை உற்பத்திகள் (முக்கியமாக, பால் மா), எண்ணெய் மற்றும் கொழுப்புக்கள் (முக்கியமாக, தேங்காய் எண்ணெய்) மற்றும் கடலுணவு (முக்கியமாக, பாதுகாக்கப்பட்ட மீன்) என்பவற்றின் இறக்குமதியினால் உந்தப்பட்டிருந்தது. இருப்பினும், தானியங்கள் மற்றும் ஆலைக் கைத்தொழில் உற்பத்திகள் (குறிப்பாக, அரிசி) மற்றும் சீனி மற்றும் இனிப்புப் பண்டங்கள் என்பவற்றின் இறக்குமதிகளில் குறைவொன்று காணப்பட்டது.

**இடைநிலைப் பொருட்கள்:** புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் (முதன்மையாக, துணிகள் மற்றும் நூழிலைகள்), எரிபொருள், கோதுமை மற்றும் இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் என்பன மீதான குறைந்தளவிலான செலவினத்தினால் முக்கியமாக உந்தப்பட்டு இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 ஓகத்தில் வீழ்ச்சியடைந்தது. மேலும், இரசாயன உற்பத்திகள், பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள், தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் என்பன உள்ளடங்கலாக இடைநிலைப் பொருட்களின் ஏனைய பல்வேறு வகைகளும் குறைவொன்றினைக் காண்பித்தன. மசகெண்ணெய் இறக்குமதி அளவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றிற்கு மத்தியில், தாழ்ந்தளவிலான அளவுகள் மற்றும் விலைகள் ஆகிய இரண்டினாலும் தோற்றுவிக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் செலவினத்தில் ஏற்பட்ட குறைவொன்றின் முதன்மைக் காரணமாக ஒட்டுமொத்த எரிபொருள் செலவினமும் 2023 ஓகத்தில் வீழ்ச்சியொன்றினைக் கொண்டிருந்தது. இருப்பினும், ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த இடைநிலைப் பொருட்களின் வகைகள் வளமாக்கி, அடிப்படை உலோகங்கள் மற்றும் வேளாண்மை உள்ளீடுகள் என்பவற்றினை உள்ளடக்கின்றன.

**முதலீட்டுப் பொருட்கள்:** முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2022 ஓகத்து மற்றும் 2023 யூலை ஆகிய மாதங்களுடன் ஒப்பிடுகையில் 2023 ஓகத்தில் அதிகரித்தது. பொறி மற்றும் சாதனங்களின் (முதன்மையாக, நீராவி இயந்திரங்கள்) இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பானது இவ்வதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்தது. இருப்பினும், கட்டடவாக்கப் பொருட்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் என்பவற்றின் இறக்குமதிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஓகத்தில் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன.

**வரைபடம் 5: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6: இறக்குமதிகளின் உள்ளடக்கம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் வர்த்தகச் சுட்டெண்கள்

இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற வர்த்தக மாற்று விகிதமானது ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியானது இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினை விஞ்சிக் காணப்பட்டமையினால் 2022 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஓகத்தில் 5.1 சதவீதத்தினால் மோசமடைந்து காணப்பட்டது.

**வரைபடம் 7: வர்த்தக மாற்று விகிதம்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

ஏற்றுமதி அளவுச் சுட்டெண், 2022 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஓகத்தில் 10.6 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், அலகுப் பெறுமதிச் சுட்டெண் 17.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது 2023 ஓகத்தில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட குறைவானது அலகு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் முக்கியமான விளைவொன்றாகுமென்பதனைச் சுட்டிக்காட்டியது.

**வரைபடம் 8: ஏற்றுமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

இறக்குமதி அளவுச் சுட்டெண், 2022 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஓகத்தில் 10.3 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) மேம்பட்ட வேளையில், அலகுப் பெறுமதிச் சுட்டெண் 13.0 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) வீழ்ச்சியடைந்தமையானது, இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட குறைவானது தாழ்ந்தளவிலான அலகு விலைகளினால் முதன்மையாக உந்தப்பட்டமையினை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 9: இறக்குமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய அபிவிருத்திகள்

**தொழிலாளர் பணவனுப்பல்கள்:** தொழிலாளர் பணவனுப்பல்கள் 2022 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 325 மில்லியனுடனும் 2023 யூலையில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 541 மில்லியனுடனும் ஒப்பிடுகையில் 2023 ஓகத்தில் ஐ.அ.டொலர் 499 மில்லியனாக விளங்கின. அதேவேளை, தற்காலிகத் தரவுகளின் அடிப்படையில், 2022இல் பதிவுசெய்யப்பட்ட 311,056 எண்ணிக்கையிலான மொத்த ஆண்டு ரீதியிலான புறப்படுகைகளுடன் ஒப்பிடுகையில் 2023 ஓகத்து மாதத்திலும் 2023 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியிலும் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்கான நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகள் முறையே 26,131 மற்றும் 197,146ஆக விளங்கின.

**சுற்றுலாப் பயணிகள்:** சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2023 யூலையில் பதிவுசெய்யப்பட்ட 143,039 சுற்றுலாப் பயணிகளின் வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2023 ஓகத்தில் 136,405இற்கு வீழ்ச்சியடைந்தமையானது ஆண்டு ரீதியில் பதிவுசெய்யப்பட்ட பருவகால போக்கினைப் பிரதிபலித்தது. இருப்பினும், ஒன்றுசேர்ந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2022இன் சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 496,430 பயணிகளின் வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2023இன் தொடர்புடைய காலப்பகுதியில் 904,318 ஆக விளங்கின. சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் முன்னைய மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 219 மில்லியனையும் 2022இன் ஓகத்து மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 68 மில்லியனையும் கொண்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் 2023இன் தொடர்புடைய மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 211 மில்லியனாக மதிப்பிடப்பட்டன. இதன் விளைவாக, 2022இன் சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 833 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023இன் தொடர்புடைய காலப்பகுதியில் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,304 மில்லியனாக விளங்கின. இக்காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முக்கிய மூல நாடுகளாக ஐக்கிய இராச்சியம், சீனா, ஜேர்மனி மற்றும் ருஷியா என்பன காணப்பட்டன.

**வரைபடம் 10: மாதாந்த சுற்றுலாப் பயணிகள் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 11: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான வருவாய்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
உரிமம்பெற்ற வங்கிகள்
இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2023 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 352 மில்லியன் பெறுமதியான ஒன்றுசேர்ந்த தேறிய உட்பாய்ச்சலொன்றை பதிவுசெய்தபோதிலும் 2023 ஓகத்தில் ஐ.அ.டொலர் 37 மில்லியன் பெறுமதி கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. அதேவேளை, முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2023 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 15 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.

## பன்னாட்டு ஒதுக்குகள்

மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023 ஓகத்து இறுதியளவில் ஐ.அ.டொலர் 3.6 பில்லியனாக விளங்கின. இது பயன்படுத்தக்கூடிய தன்மை தொடர்பிலான நிபந்தனைகளுக்குட்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.35 பில்லியனிற்கு நிகரான சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது. மாத காலப்பகுதியில் தேறிய அடிப்படையில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு ஐ.அ.டொலர் 171 மில்லியன் தொகையினை மத்திய வங்கி நிரம்பல் செய்தது. ஒட்டுமொத்தமாக, 2023 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் தேறிய அடிப்படையொன்றில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் தொகைக்கு மத்திய வங்கி கொள்வனவு செய்துள்ளது.

**வரைபடம் 12: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

**செலாவணி வீதமானது 2023 ஓகத்து மாத காலப்பகுதியில் பெறுமான உயர்வொன்றினைப் பதிவுசெய்தது.** 2023 ஒத்தோபர் 02 வரையான ஆண்டு காலப்பகுதியில், இலங்கை ரூபா ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக 12.2 சதவீதத்தினால் தொடர்ந்தும் உயர்வடைந்தது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், 2023 ஒத்தோபர் 02 வரையான ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபாவானது யூரோ, ஸ்ரேலிங் பவுன், யப்பானிய யென், இந்திய ரூபா மற்றும் அவுஸ்திரேலிய டொலர் என்பவற்றிற்கெதிராக உயர்வடைந்தது. இதன் விளைவாக, உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (REER 24) 2023 ஓகத்து மாத காலப்பகுதியில் உயர்வடைந்த போதிலும் 100 சுட்டெண் புள்ளிகளின் மட்டத்திற்கு மிகவும் கீழாக தொடர்ந்தும் காணப்பட்டமையானது வெளிநாட்டுத்துறைப் போட்டித்தன்மையின் பேணுகையினைக் குறித்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 13: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 14: உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீத (REER 24) அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 1: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு***

| நாணயம் | 2021 | 2022 | 2023 (ஒத் 02 வரை) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -7.0% | -44.8% | +12.2% |
| யூரோ | +1.1% | -41.4% | +13.2% |
| ஸ்ரேலிங் பவுன் | -6.0% | -38.1% | +10.9% |
| யப்பானிய யென் | +3.8% | -36.4% | +26.8% |
| அவுஸ்திரேலிய டொலர் | -1.2% | -40.8% | +18.2% |
| இந்திய ரூபா | -5.5% | -38.6% | +12.6% |

*தேய்வு (-)/உயர்வு (+)

மூலம்: இலங்கை மத்திய வங்கி

2023 செத்தெம்பரிற்கான வெளிநாட்டுத்துறைப் பத்திரிகை வெளியீடு 2023 ஒத்தோபர் 31 அன்று வெளியிடப்படும்.

**இணைப்பு I:**

## வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் சுருக்கம் (அ)

| வகை | ஓகத் 2022 (ஐ.அ.டொ. மில்) | ஓகத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஓகத் 2022 (ஐ.அ.டொ. மில்) | சன-ஓகத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 1,225 | 1,119 | -8.7 | 8,912 | 8,010 | -10.1 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,486 | 1,426 | -4.0 | 12,801 | 10,974 | -14.3 |
| வர்த்தக மீதி | -260 | -307 | | -3,889 | -2,964 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 68 (ஆ) | 211 (இ) | 209.8 | 833 (ஆ) | 1,304 (இ) | 56.7 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 325 | 499 | 53.4 | 2,215 | 3,863 | 74.4 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல்கள் (தேறிய) (ஈ) | 3 | 6 | | 97 | 15 | |
| அரச பிணையங்கள் சந்தையிற்கான மொத்த உட்பாய்ச்சல்கள் | 0.1 | 52 | | 16 | 657 | |
| திரண்ட நிலுவை | | | | -3,035 | 2,034 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2022இல் திருத்தப்பட்டது
(இ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2023இல் திருத்தப்பட்டது
(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றது

**இலங்கை மத்திய வங்கி, வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள் > பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.**
**https://www.cbsl.gov.lk/ta/node/6181**

**இணைப்பு II:**

**இலங்கை மத்திய வங்கியினால் வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)**

| வகை | ஒகத் 2022 (ஐ.அ.டொ. மில்) | ஒகத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஒகத் 2022 (ஐ.அ.டொ. மில்) | சன-ஒகத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **966.3** | **871.7** | **-9.8** | **7,167.7** | **6,273.6** | **-12.5** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 42.0 | 55.9 | 33.2 | 366.0 | 354.4 | -3.2 |
| விலங்குத்தீன் | 22.6 | 9.9 | -56.2 | 109.2 | 102.2 | -6.5 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 566.9 | 436.2 | -23.1 | 4,095.6 | 3,325.7 | -18.8 |
| இதில் ஆடைகள் | 526.7 | 390.0 | -26.0 | 3,773.1 | 3,020.3 | -20.0 |
| புடவைகள் | 31.7 | 38.0 | 19.9 | 240.9 | 237.6 | -1.4 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 8.5 | 8.3 | -2.6 | 81.6 | 67.8 | -16.9 |
| இறப்பர் உற்பத்திகள் | 96.6 | 78.2 | -19.1 | 676.3 | 588.1 | -13.0 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 44.3 | 47.5 | 7.2 | 288.6 | 353.0 | 22.3 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 53.0 | 51.2 | -3.3 | 375.9 | 418.7 | 11.4 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 11.1 | 60.3 | 444.5 | 89.4 | 118.3 | 32.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 32.3 | 40.6 | 25.8 | 409.8 | 325.7 | -20.5 |
| இரசாயன உற்பத்திகள் | 18.2 | 15.6 | -14.2 | 150.8 | 126.4 | -16.2 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 11.6 | 9.0 | -22.4 | 95.7 | 76.3 | -20.2 |
| அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் | 5.3 | 7.4 | 41.4 | 37.9 | 42.6 | 12.4 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 8.7 | 7.0 | -19.6 | 54.2 | 47.7 | -11.9 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 5.0 | 4.4 | -12.3 | 43.2 | 37.5 | -13.3 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 13.5 | 15.5 | 14.9 | 120.2 | 115.6 | -3.8 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 3.9 | 3.1 | -20.8 | 26.0 | 22.9 | -12.0 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 31.3 | 29.7 | -5.2 | 228.8 | 218.7 | -4.4 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **254.2** | **242.9** | **-4.5** | **1,708.5** | **1,702.9** | **-0.3** |
| தேயிலை | 124.4 | 119.6 | -3.8 | 819.3 | 870.4 | 6.2 |
| இறப்பர் | 3.2 | 2.0 | -37.9 | 29.4 | 21.2 | -27.9 |
| தேங்காய் | 35.5 | 31.8 | -10.3 | 284.3 | 224.0 | -21.2 |
| வாசனைத்திரவியங்கள் | 40.1 | 47.4 | 18.2 | 233.5 | 260.6 | 11.6 |
| காய்கறிகள் | 3.0 | 2.0 | -33.3 | 17.5 | 17.9 | 2.2 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.0 | 2.1 | 5.7 | 15.7 | 18.2 | 15.9 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 20.5 | 20.2 | -1.2 | 120.4 | 123.3 | 2.4 |
| கடலுணவு | 25.5 | 17.7 | -30.8 | 188.4 | 167.3 | -11.2 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **2.5** | **2.0** | **-19.2** | **21.1** | **15.7** | **-25.7** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **2.4** | **2.1** | **-12.1** | **14.8** | **17.9** | **21.2** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,225.4** | **1,118.6** | **-8.7** | **8,912.1** | **8,010.1** | **-10.1** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு III:**

**நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)**

| வகை | ஓகத் 2022 (ஐ.அ.டொ. மில்) | ஓகத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஓகத் 2022 (ஐ.அ.டொ. மில்) | சன-ஓகத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **268.8** | **267.5** | **-0.5** | **1,786.5** | **1,823.8** | **2.1** |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 27.9 | 20.3 | -27.3 | 211.0 | 192.2 | -8.9 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 4.2 | 8.2 | 97.6 | 50.7 | 50.2 | -1.2 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 43.6 | 41.7 | -4.3 | 312.0 | 276.8 | -11.3 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 161.7 | 165.7 | 2.5 | 1,039.7 | 1,128.6 | 8.6 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **11.4** | **10.9** | **-5.1** | **93.4** | **104.5** | **11.8** |
| 11 குடிபானங்கள் | 4.1 | 4.2 | 3.0 | 33.3 | 43.0 | 29.2 |
| 12 புகையிலை மற்றும் புகையிலைத் தயாரிப்புக்கள் | 7.4 | 6.6 | -9.7 | 60.2 | 61.6 | 2.3 |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **36.4** | **32.6** | **-10.5** | **303.7** | **259.6** | **-14.5** |
| 23 மசகு இறப்பர் | 3.3 | 2.1 | -35.9 | 30.2 | 22.1 | -27.0 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 18.4 | 19.8 | 7.3 | 162.5 | 152.0 | -6.5 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **32.3** | **40.6** | **25.8** | **409.8** | **325.7** | **-20.5** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 32.3 | 40.6 | 25.8 | 394.0 | 325.7 | -17.3 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | - | - | - | 15.9 | - | - |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **8.0** | **6.5** | **-18.8** | **68.9** | **44.3** | **-35.7** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 6.7 | 6.1 | -10.2 | 55.5 | 42.9 | -22.8 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **23.3** | **19.5** | **-16.3** | **184.5** | **155.0** | **-16.0** |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **176.4** | **173.2** | **-1.8** | **1,269.9** | **1,264.9** | **-0.4** |
| 62 இறப்பர் தயாரிப்புக்கள் வே.எ.கு | 67.8 | 57.9 | -14.6 | 472.0 | 438.6 | -7.1 |
| 65 புடவை நூலிழை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 39.5 | 41.9 | 6.0 | 307.9 | 274.1 | -11.0 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 49.7 | 52.6 | 5.8 | 328.2 | 394.2 | 20.1 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **62.0** | **110.4** | **78.1** | **452.7** | **524.5** | **15.9** |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 31.2 | 29.6 | -5.2 | 236.3 | 249.6 | 5.6 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **606.7** | **457.4** | **-24.6** | **4,341.9** | **3,507.5** | **-19.2** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 561.0 | 414.2 | -26.2 | 4,007.7 | 3,198.4 | -20.2 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **0.04** | **0.1** | **157.3** | **0.8** | **0.3** | **-60.1** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,225.4** | **1,118.6** | **-8.7** | **8,912.1** | **8,010.1** | **-10.1** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும்.
https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

**இணைப்பு IV:**

**இலங்கை மத்திய வங்கியினால் வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)**

| வகை | ஓகத் 2022 (ஐ.அ.டொ. மில்) | ஓகத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஓகத் 2022 (ஐ.அ.டொ. மில்) | சன-ஓகத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **231.2** | **268.1** | **15.9** | **1,945.7** | **2,028.3** | **4.2** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 139.7 | 152.2 | 9.0 | 1,106.2 | 1,158.0 | 4.7 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 42.9 | 8.7 | -79.6 | 285.4 | 90.6 | -68.3 |
| பால் உற்பத்திகள் | 11.6 | 32.8 | 184.1 | 174.5 | 206.5 | 18.3 |
| காய்கறிகள் (ஆ) | 32.9 | 36.2 | 10.2 | 226.2 | 247.3 | 9.4 |
| கடலுணவு | 3.7 | 9.9 | 170.1 | 49.3 | 43.3 | -12.2 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 28.2 | 23.7 | -15.9 | 148.8 | 289.4 | 94.5 |
| வாசனைத்திரவியங்கள் | 11.8 | 10.8 | -8.3 | 93.2 | 86.4 | -7.3 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 8.7 | 29.9 | 244.1 | 128.7 | 194.5 | 51.1 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 91.5 | 115.9 | 26.6 | 839.4 | 870.3 | 3.7 |
| தனியாள் ஊர்திகள் | 0.8 | 2.0 | 142.7 | 5.7 | 17.6 | 206.6 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 46.5 | 52.4 | 12.8 | 347.5 | 466.2 | 34.2 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 5.6 | 7.1 | 26.9 | 71.3 | 37.0 | -48.1 |
| புடவை மற்றும் துணைப்பொருட்கள் | 13.7 | 13.6 | -0.7 | 158.6 | 108.6 | -31.5 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 1.3 | 10.9 | 748.2 | 49.9 | 52.4 | 5.1 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 7.8 | 12.8 | 62.8 | 86.9 | 69.5 | -20.0 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 15.9 | 17.1 | 7.9 | 119.7 | 119.0 | -0.6 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **1,036.5** | **857.1** | **-17.3** | **8,584.0** | **7,185.5** | **-16.3** |
| எரிபொருள் | 388.6 | 343.7 | -11.6 | 3,317.9 | 3,079.5 | -7.2 |
| இதில் மசகெண்ணெய் | 82.2 | 118.4 | 44.1 | 257.3 | 797.2 | 209.8 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 306.3 | 224.8 | -26.6 | 2,796.0 | 1,941.3 | -30.6 |
| நிலக்கரி | 0.1 | 0.4 | 720.6 | 264.6 | 341.1 | 28.9 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 17.0 | 17.2 | 1.4 | 133.7 | 179.2 | 34.1 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 269.7 | 192.3 | -28.7 | 2,175.7 | 1,584.0 | -27.2 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 40.4 | 32.6 | -19.2 | 325.5 | 271.1 | -16.7 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 15.1 | 20.0 | 33.0 | 148.3 | 166.2 | 12.1 |
| கோதுமை மற்றும் சோளம் | 29.9 | 3.1 | -89.7 | 170.3 | 201.9 | 18.6 |
| அடிப்படை உலோகங்கள் | 12.7 | 21.9 | 72.2 | 270.0 | 209.0 | -22.6 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 53.8 | 41.0 | -23.8 | 464.9 | 296.4 | -36.2 |
| இரசாயன உற்பத்திகள் | 92.7 | 75.7 | -18.4 | 682.1 | 527.6 | -22.7 |
| வளமாக்கி | 19.9 | 29.6 | 48.5 | 98.2 | 139.8 | 42.3 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 36.9 | 19.1 | -48.3 | 257.6 | 120.2 | -53.3 |
| கனிம உற்பத்திகள் | 11.1 | 7.0 | -37.2 | 102.4 | 46.0 | -55.1 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 48.7 | 53.9 | 10.7 | 437.5 | 364.6 | -16.7 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **212.6** | **299.4** | **40.8** | **2,263.5** | **1,747.9** | **-22.8** |
| பொறி மற்றும் கருவிகள் | 136.1 | 229.5 | 68.6 | 1,462.4 | 1,219.0 | -16.6 |
| கட்டடப் பொருட்கள் | 70.3 | 66.5 | -5.3 | 689.2 | 481.4 | -30.2 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 6.0 | 2.9 | -51.4 | 109.2 | 45.6 | -58.2 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.2 | 0.4 | 134.8 | 2.7 | 1.9 | -28.4 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **5.5** | **1.4** | **-74.2** | **7.7** | **12.4** | **60.0** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,485.9** | **1,426.0** | **-4.0** | **12,800.9** | **10,974.1** | **-14.3** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **1,097.3** | **1,082.3** | **-1.4** | **9,483.0** | **7,894.5** | **-16.8** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## இணைப்பு V:

### நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிச் செலவினம் (அ)

| வகை | ஓகத் 2022 (ஐ.அ.டொ. மில்) | ஓகத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஓகத் 2022 (ஐ.அ.டொ. மில்) | சன-ஓகத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **190.8** | **165.2** | **-13.5** | **1,446.6** | **1,467.1** | **1.4** |
| 02 பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் பறவைகளின் முட்டைகள் | 11.6 | 35.7 | 209.1 | 174.9 | 214.0 | 22.4 |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 3.8 | 10.0 | 165.0 | 50.2 | 44.0 | -12.3 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 72.3 | 11.6 | -84.0 | 452.2 | 291.7 | -35.5 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 34.0 | 38.9 | 14.4 | 260.0 | 274.1 | 5.4 |
| 06 சீனி, சீனித் தயாரிப்புகள் மற்றும் தேன் | 28.2 | 23.7 | -15.9 | 148.8 | 289.4 | 94.5 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 15.2 | 14.2 | -6.1 | 122.1 | 115.6 | -5.3 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **6.6** | **11.1** | **70.2** | **65.3** | **78.0** | **19.4** |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **47.0** | **33.3** | **-29.2** | **347.0** | **210.4** | **-39.4** |
| 23 மசகு இறப்பர் | 32.8 | 13.6 | -58.4 | 220.0 | 91.2 | -58.6 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 4.1 | 3.2 | -21.6 | 18.9 | 29.1 | 53.8 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **388.6** | **343.7** | **-11.6** | **3,317.9** | **3,079.5** | **-7.2** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 363.1 | 320.4 | -11.8 | 2,892.8 | 2,558.1 | -11.6 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 25.4 | 22.8 | -10.1 | 160.4 | 180.3 | 12.4 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **2.7** | **18.1** | **572.2** | **62.0** | **115.7** | **86.5** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 2.0 | 17.0 | 753.5 | 51.0 | 108.5 | 112.8 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **207.6** | **195.8** | **-5.7** | **1,571.0** | **1,402.8** | **-10.7** |
| 54 மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 43.9 | 48.1 | 9.7 | 326.3 | 434.7 | 33.2 |
| 56 வளமாக்கி மற்றும் தயாரிக்கப்பட்டவை | 19.8 | 29.5 | 48.7 | 98.1 | 139.6 | 42.4 |
| 57 ஆரம்ப வடிவத்தில் பிளாத்திக்குகள் | 32.3 | 26.2 | -18.8 | 321.8 | 188.3 | -41.5 |
| 58 ஆரம்ப வடிவத்தில் அல்லாத பிளாத்திக்குகள் | 16.6 | 10.9 | -34.2 | 117.4 | 87.6 | -25.4 |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **420.8** | **341.5** | **-18.8** | **3,707.1** | **2,777.8** | **-25.1** |
| 64 தாள், தாள் அட்டைகள் மற்றும் அவற்றின் பொருட்கள் | 38.3 | 31.2 | -18.6 | 305.3 | 263.4 | -13.7 |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 261.2 | 187.3 | -28.3 | 2,131.6 | 1,531.4 | -28.2 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 39.0 | 37.0 | -5.3 | 352.5 | 317.3 | -10.0 |
| 67 இரும்பு மற்றும் உருக்கு | 19.0 | 31.8 | 66.9 | 374.8 | 273.2 | -27.1 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **152.3** | **253.7** | **66.6** | **1,713.8** | **1,365.8** | **-20.3** |
| 72 குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கான சிறப்பியல்புவாய்ந்த பொறி | 19.7 | 33.5 | 70.0 | 306.9 | 167.4 | -45.5 |
| 74 பொதுவான கைத்தொழில்களுக்கான பொறி மற்றும் கருவிகள் வே.எ.கு பொறி உதிரிப்பாகங்கள் | 28.8 | 38.9 | 35.1 | 332.9 | 229.7 | -31.0 |
| 75 அலுவலக எந்திரங்கள் மற்றும் தன்னியக்க தரவு செயன்முறைப்படுத்தல் எந்திரங்கள் | 10.6 | 13.2 | 25.1 | 123.6 | 90.4 | -26.9 |
| 76 தொலைத்தொடர்பூட்டல் மற்றும் ஒலிப் பதிவுகள் மற்றும் மீள் தயாரிப்பு பொறிகள் மற்றும் கருவிகள் | 9.3 | 24.0 | 158.0 | 170.6 | 150.4 | -11.8 |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 51.8 | 43.3 | -16.4 | 460.0 | 362.3 | -21.2 |
| 78 வீதி ஊர்திகளி | 13.1 | 11.5 | -12.6 | 121.4 | 91.6 | -24.5 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **64.0** | **61.8** | **-3.4** | **560.8** | **466.3** | **-16.8** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 12.7 | 11.3 | -11.7 | 138.9 | 95.3 | -31.4 |
| 87 தொழில்சார், விஞ்ஞான மற்றும் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் மற்றும் வே.எ.கு கருவிகள் | 10.5 | 14.8 | 41.1 | 103.2 | 99.0 | -4.1 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **5.5** | **1.8** | **-67.8** | **9.1** | **10.6** | **15.8** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,485.9** | **1,426.0** | **-4.0** | **12,800.9** | **10,974.1** | **-14.3** |

(அ) தற்காலிகமானது

வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf